இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தோமா அவரிடம், “ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்துகொள்ள இயலும்?” என்றார். இயேசு அவரிடம், “வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்” என்றார் . (யோவான் 14:5-7)

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் முதல் ஆயருக்கு இறைமக்களின் கண்ணீர் அஞ்சலி



மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் ஜேம்ஸ் சான் சூன் சியோங் (Rt. Rev. Bishop Emeritus James Chan Soon Cheong) கடந்த ஏப்ரல் 22ம் தேதி காலை 9.15 மணியளவில் தனது 97வது வயதில் மறைமாவட்ட மஜோடி மையத்தில் அமைந்துள்ள ஓய்வுபெற்ற குருமார்கள் மற்றும் முதியோர்களுக்கான இல்லமான கிரேஸ்வில்லில் காலமானார். "இறக்கும் வரை அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார்" என்பது குறிப்பிடத்தக்கது.

பேராக் மாநிலத்தில், செலாமாவில் ஜூலை 26, 1926 இல் பிறந்த ஜேம்ஸ் ஒரு கத்தோலிக்க குடும்பத்தில் ஆறு உடன் பிறந்தவர்களில் மூத்தவர். 1941-ல் இரண்டாம் உலகப் போர் தொடங்கும் வரை புனித சவேரியார் பள்ளியில் கல்வி பயின்றார். அவர் தனது இடைநிலைப் பள்ளிக் கல்வியை தைப்பிங்கில் உள்ள புனித ஜார்ஜ் இடைநிலைப்பள்ளியில் 1947 டிசம்பரில் முடித்தார். குருவானவர் ஆவதற்கான அவரது ஆர்வம் அப்போதைய தைப்பிங்கில் உள்ள புனித பிரகாசியார் கத்தோலிக்க தேவாலயத்தின் பங்குத் தந்தை அருள்பணி நோயல் கிளெமென்ட் மற்றும் லாசாலியன், சகோதரர் டென்னிஸ் ஆகியோரால் ஈர்க்கப்பட்டது. 1950-ம் ஆண்டு தனது 24 ஆம் வயதில் சிங்கப்பூரில் உள்ள குருத்துவக் கல்லூரியில் ஒன்பது ஆண்டுகள் கழித்தப்பின், பினாங்கில் 1959 ஆம் ஆண்டில், ஆகஸ்ட் 9 ஆம் தேதி மறைந்த ஆயர் பிரான்சிஸ் சான் அவர்களால் குருத்துவத்திற்கு திருநிலைப் படுத்தப்பட்டார். டிசம்பர் 22, 1972 இல் சிங்கப்பூர் தனியொரு மாமறைமாவட்ட மாகப் பிரகடணப்படுத்தப்பட்ட வேளை யில், மலாக்கா மற்றும் ஜொகூர் புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. எனவே, பினாங்கில் இருந்த அருள்தந்தை ஜேம்ஸ் சான் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக ஜூன் 8, 1973 இல் அருள்பொழவு செய்யப்பட்டார் என்பது வரலாறு.

அவரது 28 ஆண்டுகால பதவிக் காலத்தில், மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக அவரது முக்கிய சாதனைகளில் ஒன்று மஜோடி மையத்தை நிறுவியதும் மறைமாவட்டம் முழுவதும் பல ஆலயங்களைக் கட்டியதுமாகும். அவர் எழுப்பிய ஆலயங்களில் திருஇருதய ஆண்டவர் பேராலயம் குறிப்பிடத்தக்கது.

அவர் தனது வாழ்க்கை மற்றும் ஆன்மீகம் பற்றி 1992 இல் "ரம்புத்தான் மரத்தின் பழங்கள் பழுக்கும் தருவாயில்” (“When The Fruits of the Rambutan Tree are about to Ripen” என்ற புத்தகத்தையும் எழுதினார். ஆயர் அவர்கள் 2001 இல் தனது 75 வயதில் பணி ஓய்வு பெற்றார்

**இனிய நினைவுகள்**

இதற்கிடையில், பினாங்கு மறைமாவட்டத் தின் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், ஆயர் ஜேம்ஸ் அவர்களின் கீழ் பல ஆண்டுகள் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில் தொடக்கத்தில் ஓர் அருள்பணியாளராகவும் பின்னர் பேரருட்தந்தையாகவும் (Msgr) பணியாற்றினார். ஆயர் செபஸ்தியன் அவர்தம் பிரியாவிடை உரையில் "ஆயர் ஜேம்ஸ் சான் எப்போதும் மக்களை நிபந்தனையின்றி நேசிப்பதே தனது பணி என்பதை புரிந்துகொண்டவர். மேலும் அவர் பலவீனமான நிலையில் கூட, அதைத் தொடர்ந்தார்," என்றும், ஆயர் ஜேம்ஸ், ஆயர் கிரிகோரி யோங் மற்றும் கோலாலம்பூர் பேராயர் டொமினிக் வெண்டர்கோன் ஆகியோருடன் சேர்ந்து 1970ம் ஆண்டுகளில் தீபகற்ப மலேசியாவின் கத்தோலிக்க திருஅவை யைப் புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொண்டதை ஆயர் செபஸ்டியன் நினைவு கூர்ந்தார். தொடர்ந்து, அவரது பிரியா விடை உரையில்:

“உண்மையில் இவர் கடவுளின் மனிதர், வாழ்க்கைப் பயணத்தில் பிரச்சனைகளுக்கு சற்றும் அஞ்சாமல், மறைமாவட்ட திருஅவை யின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். ஆயராக ஜேம்ஸ் சான் அவர்கள், 1973-ல் புதிதாக உருவாக்கப்பட்ட மலாக்கா-ஜொகூர் மறைமாட்டத்தின் முதல் ஆயராக அருள் பொழிவு செய்ததோடு, கொடையாகவும் அளித்த மூவொரு கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். அன்றிலிருந்து, 2001-ல் நீங்கள் ஓய்வு பெறும் வரை, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, நம்பகத்தன்மை மற்றும் உங்கள் ஆயர்நிலை கருப்பொருளான **"சேவை செய்வதே என் மகிழ்ச்சி"** என்பதற்கு எல்ல காலத்திலும் உண்மை யாக வாழ்ந்தீர்” என்று மறைந்த ஆயருக்கு புகழாரம் சூட்டினார்.




**மறைமாவட்டம்**

தொடர்ந்து, “ஆயர் ஜேம்ஸ் சான் ஊடக உலகிலும் சுறுசுறுப்பாக இருந்தார் என்றால் மிகையாகது. ஓர் அச்சகத்தை நிர்வகித்ததோடு மக்களுக்கு கத்தோலிக்க இலக்கியங்களை வழங்கும் புத்தகக் கடை களையும் திறந்தார் என்றும், "கடவுளின் வார்த்தையை பரப்புவதற்காக கத்தோலிக்க தகவல் மையத்தை உருவாக்கி, சமூக தகவல்தொடர்புகளில் அவர் தனது நேரத்தை செலவிட்டு பிறருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்றும் ஆயர் செபஸ்தியன் அவர்கள் தனது உரையில் பகர்ந்துகொண்டார்.

மேலும், ஆயர் ஜேம்ஸ் எப்போதும் மக்களை வாழ்த்திய விதத்தையும் ஆயர் செபஸ்டியன் நினைவு கூர்ந்தார்: “ஆயர் ஜேம்ஸ் சானுக்கு ஹலோ இல்லை. அது எல்லாருக்கும் எப்போதும் ‘ஐ லவ் யூ’தான். வயதாகிவிட்டாலும், அவரை வாழ்த்த வரும் சிலரை அவர் பல நேரங்களில் அடையாளம் கண்டு, அவர்களைப் பெயர் சொல்லி அழைப்பார். தனது முதுமையின் பலவீனத்தை உணர்ந்தாலும், எவரும் அணுகக்கூடிய எளிய, கனிவான மற்றும் பணிவான ஆயராக திகழ்ந்ததோடு, அவருடன் இருக்கும் போது கிறிஸ்துவின் உண்மை ஊழியரின் மென்மையையும் அமைதியையும் அவர் வெளிப்படுத்தினார் என்பது மறைக்க. மறுக்க முடியாத உண்மையாகும் என்று அவரை வாழத் தினார்.

நிறைவாக, ஆயர் ஜேம்ஸ் சான் ஓய்வுபெற்ற பிறகும், அடுத்து வந்த ஆயர்களுக்குக் கீழ்ப்படிந்தும், மறைமாவட்ட நிர்வாகத்தில தலையிடாமலும் வாழ்ந்தார் என்பதையும் நினைவுகூர்ந்து ஆயர் செபஸ்தியன் நன்றி கூறினார்.

ஆயர் ஜேம்ஸ் சான் அவர்களின் இறுதி திருப்பலி, ஜொகூர், தெப்ராவ் எனும் இடத்தில் அவர் எழுப்பிய திருஇருதய ஆண்டவர் பேராலயத்தில், காலை 11.00 மணிக்கு, ஆயர் பெர்னர்ட் போல் அவர்களின் தலைமையில் கொண்டாடப் பட்டது.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் முர்ஃபி பாக்கியம் மற்றும் இந்நாள் பேராயர் ஜூலியின் லியாவ் ஆகியோருடன் கிழக்கு மலேசிய ஆயர்களும் கலந்துகொண்டனர்.

**மஜோடி மையம்**

ஆயர் ஜேம்ஸ் சான் MAJOWE மையத்தை கட்டினார். இது 23 ஆகஸ்ட் 1980 இல் அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. இது முதியோருக்கான இல்லம், குழந்தைகளுக் கான ஒரு பகல்நேர பராமரிப்பு மையம், நூற்றுக்கணக்கான மக்கள் தியானம் மற்றும் உருவாக்கப் பயிறசிகளுக்கு இடமளிக்கும் மையமுமாகத் தொடர்ந்து விரிவடைந்தது. பின்னர் அது MAJODI மையம் என மறுபெயரிடப்பட்டது. மலேசியா மற்றும் சிங்கப்பூரில் இருந்து வரும் கிறிஸ்தவப் பணிக்குழுவினர்கள் விரும்பும் இடமாக இது இன்று போற்றப்படுகிறது. மஜோடி மையம் இவரது குழந்தை என்றால் மிகையாகாது.

**ஆயர் பெர்னர்ட் போல் பகிர்வு**

திருப்பலி மறையுரையில், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் இந்நாள் ஆயர் பெர்னர்ட் போல், அவர்கள் அனைவரின் பயணத்திற்கும் அகன்ற மற்றும் குறுகிய வழிகள் என இரு வழிகள் உண்டு. ஆயர் ஜேம்ஸ் சான் இவற்றுள் குறுகிய. பலர் ஏற்காத வழியைத் தேர்வுச் செய்தார். இந்த வழியிலிருந்து பல வழிகளை உருவாக் கினார் என்று பெருமிதம் கொண்டார்.

மேலும், நாம் எந்த வழியைத் தேர்வுச் செய்தாலும் நிலைவாழ்வுக்கான ஒரே வழிதான் சிறந்த வழி என்று தம் மறையுரையை நிறைவுச் செய்தார்.

ஆயர் ஜேம்ஸ் சான் அவர்களின் உடல் உலுதிராம் கத்தோலிக்கக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

*-ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

# கோலாம்பூர் மாமறைமாவட்ட சமூக ஊடக நிலையத்தின் முன்னாள் இயக்குனர் மறைவுக்கு அஞ்சலி

மலேசிய திருஅவைக்கு குறிப்பாக கோலாலம்பூர் மாமறைமாவட்டத்திற்கு சேவையாற்றிய பல பொது நிலையினரில் குறிப்பிடத்தக்கவர் இ.சாம்சன் ஆவார்.

இவரது தந்தை இருதயத்திற்கும் தாயார் அன்னகண்ணுவுக்கும் மூத்த மகனாகப் பிறந்த இவருக்கு உடன் பிறந்தோராக 3 சகோதரிகளும் ஒரு சகோதரரும் (திரு பத்திநாதன்) உள்ளனர் .


1950ல் இவரது குடும்பம் கோலாசிலாங் கூரிலிருந்து கோலாலம்பூர், செந்தூல் பகுதிக்கு இடம் மாறியது. தொடர்ந்து, இவரது இளமை காலம் செந்தூல் வட்டாரத்தை மையமிட்டு இருந்தது. இங்கு அமைந்துள்ள புனித யோசேப்பு பங்கில் இறைப்பணியில் அதிகம் ஈடுபட்டிருந்தார்.

மேலும் இவர் கலையுலகத்திலும் அக்கறைக் காட்டினார். நடன குழு, நாட்டிய குழு, மற்றும் 'நீல வானம்' நாடகக் குழுவிலும் பங்கெடுத்தார். 1970, 80களில் மலேசிய வானொலி, தொலைக்காட்சி (ஆர்.டி.எம்.) நிலையத்தில் ஆங்கில செய்தி வாசிப்பாள ராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத் தக்கது. அத்தோடு, ஆங்கில நாடகங் களிலும் நடித்துள்ளார். நிகழ்ச்சி தொகுப்பாளராக அறிவிப்பாளர் மன்றத் தில் பங்காற்றினார்.

1967ம் ஆண்டு கோலாலம்பூர் மாமறை மாவட்ட சமூக தொடர்பு நிலையத்தில் பணிக்குச் சேர்ந்தார். உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் பயிற்சி பெற்றார்.

1984ல் கார்தினால் அமரர் சோட்டர் பெர்னான்டஸ் அவர்களால் இந்த சகாயா சுவாரா எனும் பல்லூடக மையத்தின் இயக்குனராக நியமிக்கப்பட்டார். இதன்வழி இந்த மையதின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்பட்டார்.

மலேசிய மேய்ப்புப் பணி மாநாடுகள் முதற்கொண்டு பல நிகழ்வுகள் நடந்தேற தமது பங்களிப்பை நிறைவாக ஆற்றினார். குருத்துவ கல்லூரி மாணவர்களுக்கும் சமூக தொடர்பு பற்றி போதித்து வந்துள்ளார். ஆசிய, அனைத்துலக கிறிஸ்துவ சமூக தொடர்பு அமைப்புகளில் பங்கெடுத்துள்ளார். ஒருமுறை வத்திக் கானில் திருத்தந்தை அமரர் இரண்டாம் ஜோன் போல் அவர்களையும் சந்தித்து அளவளாவும் வாய்ப்பைப் பெற்றார். 30ஆண்டுகளுக்குப் பின் 2001ல் சமூக தொடர்பு நிலைய இயக்குனர் தலைமை பொறுப்பிலிருந்து பணி ஓய்வு பெற்றார்.

இ.சாம்சன், சகாயா சுவாரா இயக்குனராக, RTM செய்தி வாசிப்பாளராக

அதன் பின்னரும் தொடர்ந்து திரு அவைக்கும் பொது அமைப்புகளுக்கும் தன் சேவையை ஆற்றினார்.

எஸ்தர் ராஜம்மாள் என்பவரை திருமணம் செய்த இவருக்குப் பிரசில்லா, டேமியன், செர்மணி என்ற 3 பிள்ளைகளும், 3 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

இறுதிக்காலத்தில் நுரையீரல் நோயால் பீடிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் தனது 77வது அகவை யில் உயிர்நீத்தார். 19.4.23ல் கெப்பேங் ஜீசஸ் கெரித்தாஸ்' தேவாலயத்தில் கொண்டாடப்பட்ட இறப்பு திருப்பலியில் பேராயர் ஜூலியன் அவர்களும் 12 அருள்பணியாளர்களும் கலந்துகொண் டனர். பின்னர், அன்னாரின் உடல் செராஸ் கிறிஸ்தவக் கல்லறையில் நல்லடக் கம் செய்யப்பட்டது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் குறள் வழி வாழ்ந்த அன்னாரின் பேரும் புகழும் எந்நாளும் நினைவில் இருக்கும். இவரது குடும்பத்திற்கும் உடன் பிறந்தோருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை மலேசிய திருஅவை தெரிவித்துக்கொள் கிறது.

*-இராயப்பன் சவரிமுத்து, பெஸ்தாரி ஜெயா*

# 2023 உலக முதியோர் நாளுக்கான கருப்பொருள்

## ‘மரியா புறப்பட்டு விரைந்து சென்றார்’



2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்பட இருக்கும் தாத்தாக்கள், பாட்டிகள் மற்றும் முதியோர்களுக்கான 3வது உலக நாளைக் கொண்டாட தலத்திருஅவைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது பொதுநிலையினர், குடும்பம் மற்றும், வாழ்வுக்கான திருப்பீடப் பேராயம்.

இயேசுவின் தாத்தா பாட்டியான தூய சுவக்கீன் அன்னா திருவிழாவை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் நான்காவது ஞாயிற்றுக்கிழமைக் கொண்டாடப்படும் இந்நாள் 2021ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தொடங்கப்பட்டது.

2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 முதல் 6 வரை லிஸ்பனில், ‘மரியா புறப்பட்டு விரைந்து சென்றார்’ என்ற கருப்பொருளில் சிறப்பிக்கப்பட இருக்கும் உலக இளையோர் நாளை முன்னிட்டு இக்கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளதாகவும், இளவயதான மரியா முதிர்ந்த வயதுள்ள எலிசபெத்தை சந்திக்க விரைந்து சென்றது இளையோர் மற்றும் முதியோர் இடையிலான ஒன்றிப்பின் வலிமையை எடுத்துரைக்கின்றது என்றும் அப்பேராயம் தெரிவித்துள்ளது.

# இயேசுவின் வழியே வாழ்வுக்கு வழி!

இன்று பாஸ்கா காலத்தின் 5-ம் வாரத்தில் இணைகிறோம். முதல் வாசகத்தில் தொடக்கத்தில் லூக்கா அக்காலத்தில் யூத கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட இருவித சமூகத்தினரை விவரிக்கிறார். கிரேக்க மொழி பேசிய தோடு, கிரேக்க பண்பாட்டை ஆதரித்தும் பின்பற்றியும் வந்த யூதர்கள் மற்றும் பாலஸ்தீனாவில் எபிரேய மொழி பேசியதோடு எபிரேய பண்பாட்டைக் கடைப்பிடித்த யூதர்கள் என இரு பெரும் பிரிவினர் எருசலேமில் காணப்பட்டனர். இவர்கள் மத்தியில் கைம்பெண்கள் கவனிப்பு மற்றும் புறக்கணிப்பு பற்றிய பிரச்சனை வெளிச்சத்திற்கு வரும்போது, பன்னிரண்டு பேரும் இறைமக்களை ஒன்றாகக் கூட்டி, திருத்தூதர்களால் உணவு விநியோக திட்டத்தை இனி நிர்வகிக்க முடியாது என்று உறுப்பினர்களிடம் கூறினர். ஆகவே, திருத்தூதர்கள் நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவன மாய்த் தெரிந்தெடுங்கள் என்று விருப்பம் தெரிவித்தனர். பின்னர் கீழ்க்கண்ட பரிந் துரைகள் அடிப்படையில்:

1.இயேசு கிறிஸ்துவில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள்.
2. தூய ஆவியாரால் நிரப்பப்பட்டவர்கள் எனும் அடிப்படையில் ஏழு திருத்தொண் டர்களைத் தேர்ந்தெடுத்தனர்

இவ்வாறு ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கானோர், தீமோன், பர்மனா, நிக்கொலா ஆகிய எழுவர் தேர்வு செய்யப்பட்டனர்.

நற்செய்தியில், இயேசு வழியாக, உண்மை யாக மட்டுமல்ல, வாழ்வாகவும் இருக்கின்றார் எனும் படிப்பினை மேலோங்கி உள்ளது. அவர் எப்படி வாழ்வாக இருக்கின்றார் என்றும் விவரிக் கப்படுகிறது. இயேசு வாழ்வாய் இருக்கின்றார் எனில், அந்த வாழ்வைப் பெற நாம் அவரிடம் நம்பிக்கை கொண்டு வாழ்வது மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. ஏனெனில் இயேசுவிடம் நம்பிக்கை கொள்பவரால் மட்டுமே நிலைவாழ்வைப் பெறமுடியும் (யோவா 3:15) தந்தையிடமும் செல்லமுடியும்.

இக்காலத்தில், நம் மத்தியில் பொய்யைக் கூட உண்மை போல் பேசுவோர் உளர். மற்றும் சிலர், பிலாத்துவைப் போன்று, “உண்மையா? அது என்ன?” (யோவா 18: 38) என்று கேட்போரும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில் நாம் உண்மை உரைப்பவரை. உண்மை வழியை அறிந்து நம்மை வழிநடத்துபவரை காண்பது எளிதல்ல. இப்படிப் பொய்யும் புரட்டும் போலித்தனமும் மிகுந்த இவ்வுலகில், இயேசு ‘நானே உண்மை’ என்று சொல்வது நமது கவனத்திற்கு உரியதாக இருக்கின்றது.

இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று வலியுறுத்துவதையும் வாசிக்கிறோம். இயேசு, “வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை” என்கிறார்.

அவரும் நம்மை நோக்கி “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். எனவே, திருத்தூதர்களைப் போல் அவரில் முழு நம்பிக்கைக்கொண்டு வாழ்வோம். நிலைவாழ்வு நமதாக்குவோம்.

*-ஆர்.கே. காஜாங்*

**பாஸ்கா 5ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 6:1-7 |
| தி.பா | 33: 1-2. 4-5. 18-19 |
| 2 வாசகம் | 1 பேதரு 2: 4-9 |
| நற்செய்தி | யோவான் 14: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**